## இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் - 2018

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் ("பல்கலைக்கழகம்") 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான

மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும். பொதுப் பேரேடு, குறிப்பேடு, குறிப்பேட்டு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டக் கற்கைகளுக்கான நிலையம் மற்றும் தொழில்சார் கற்கைகள் பிரிவு (சி.ஈ.டி.பி.எல்) மற்றும் 02 பட்டப்பின் படிப்பு கற்கைகள் பிரிவுகளினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின்போது ரூபா 32,118,829 கூட்டுத்தொகையான வருமானம் மற்றும் ரூபா 10,920,118 கூட்டுத்தொகையான செலவினம் மற்றும் ரூபா 117,119,585 மொத்தச் சொத்துக்கள் மற்றும் அந்த தொகைகளுக்கான நிதிகள் மற்றும் பொறுப்புக்கள் மீளாய்வாண்டின் இறுதியில், பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்படவில்லை. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான பல்கலைக்கழகத்தின் வருமானம், செலவு, மொத்தச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிதி என்பன அந்த தொகைகளினால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது. | அடுத்து வரும் ஆண்டிலிருந்து பல்கலைக்கழகத்தின் பிரதான நிதிக்கூற்றுக்களில் சி.ஈ.டி.பி.எல் மற்றும் பட்டப்பின் படிப்பு கற்கைகள் பிரிவுகளினை கூட்டிணைந்து ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பல்கலைக் கழகத்தின் நிதிக் கூற்றுக்களுடன் சி.ஈ.டி.பி.எல் மற்றும் பட்டப்பின் படிப்பு கற்கை பிரிவுகளின் வருமானம், செலவினம் மொத்தச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிதி என்பவற்றைக் கூட்டிணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | 1995 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அரசாங்க மூலதன மானியங்களைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த சொத்துக்களுக்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,500.74 மில்லியன் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த மானியங்களைப் பயன்படுத்தி | அடுத்துவரும் ஆண்டில் 1995 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியுடன் தொடர்புடைய மூலதன மானியத்தை காலக்கழிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எல்கேஏஎஸ் 20 இன் பிரகாரம் 1995 இல் இருந்து 2017 வரையான காலப்பகுதியுடன் தொடர்புடைய மூலதன மானியத்தை காலக்கழிவு செய்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| கொள்வனவு செய்யப்பட்டிருந்த சொத்துக்களின் பயன்தரு ஆயட்காலம் முழுவதற்கும் காலக்கழிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவுகள்

| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வகை | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் | பீஓஎஸ் இன் அறிக்கையின் பிரகாரம் | வித்தியாசம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | | |
| தளபாடம் | 401,457,572 | 426,491,937 | 25,034,365 | குறித்துக் கொள்ளப் பட்டுள்ளது. ஐயவினாவில் சுட்டிக் காட்டப்பட்ட வித்தியாசத்தினை இணக்கஞ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வித்தியாசங்களினை இணக்கஞ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| அலுவலக உபகரணங்கள் | 516,900,534 | 496,081,900 | 20,818,634 | | |

## 1.6. பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடன் மீதிகள், சம்பளம், பிணை சட்டத்தை மீறியமை, ஒப்பந்தக்காரர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டியவைகள் ரூபா 3,519,702 கூட்டுத்தொகை அறவிடப்படிராது 02 தொடக்கம் 17 வருடங்கள் வரையான வீச்சினையுடைய காலப்பகுதியொன்றுக்கு நிலுவையாக தொடர்ந்தும் காணப்பட்டது. | உத்தியோகத்தர்களுடன் தொடர்பாடல்களை மேற்கொண்டு சட்டரீதியாக யூபிஎவ் இலிருந்து நிறுவைகளினை அறவிடுவதற்கு சம்பளத்திலிருந்து நிலுவைகளினை தீர்ப்பனவு செய்வதற்கு, நிதிக்குழுவின் பரிந்துரை மற்றும் பல்கலைக்கழக சபையின் அங்கீகாரத்துடன் இந்த தொகையை பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | மேலும் தாமதமின்றி நிலுவைகளினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 43 நபர்களுக்கான ரூபா 497,879 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டியவைகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிராது 01 தொடக்கம் 02 வருடங்கள் வரையான வீச்சினையுடைய காலப்பகுதியொன்றுக்கு தீர்ப்பனவு செய்ய்படாது தொடர்ந்தும் காணப்படுகின்றது. | 02 வருடங்களினை விடவும் அதிகமாக தொடர்ந்தும் காணப்படுபவற்றை பல்கலைக்கழகத்தின் வருமானத்தின் கீழ் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். யூஜிசி சார்பாக செலுத்தப்படாது தொடர்ந்தும் காணப்படும் பல்வேறு நிலுவைகளுக்காக ரூபா 201,823.5 மொத்த தொகை செலுத்துகையினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேலும் தாமதமின்றி செலுத்த வேண்டியவைகளினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் 99 ஆம் பிரிவு | எந்தவொரு மூலத்திலிருந்தும் பெறப்பட்ட உயர்கல்வி நிறுவனத்திற்குச் சொந்தமான அனைத்து காசுகளும், பல்கலைக்கழக நிதிக்கு வரவு வைக்கப்படும். எவ்வாறாயினும், அதற்கு, முரணாக, பீடங்களினால் நடாத்தப்பட்ட சுய நிதியிடல் கற்கைகள் தொடர்பில் செயற்படுத்தப்பட்ட கணக்குகளில் காணப்பட்ட ரூபா 115,809,743 கூட்டுத்தொகையான மீதிகள் பல்கலைக்கழக நிதிக்கு வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | சுயநிதியிடல் கற்கைகள் மற்றும் பெற வேண்டியவைகளில் நிலையான வைப்புக்களில் (எவ்டீ) காணப்படும் ரூபா 115,809,743 தொகை, மாணவர்களிடமிருந்து பெறப்பட்டவை மற்றும் பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்பட்ட சுய நிதியிடல் பாடநெறிகளின் எவ்டீ'எஸ் இலிருந்து உழைக்கப்பட்ட திரண்ட வட்டி என்பவற்றுடன் தொடர்புடைய னவாகக் | பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் பிரகாரம் பல்கலைக்கழக நிதிக்கு சுய நிதியிடல் பாடநெறிகளிலிருந்தான நிதிகளினை வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காணப்படுகின்றன. இந்த எவ்டீ'எஸ் அவ்வவ்போது திரும்பிப் பெறப்படுகின்றதுடன் சுயநிதியிடல் கற்கை செயற்பாடுகளின் தொழிற்பாடு களுக்காகப் பயன்படுத்தப் படுகின்றன. எவ்வாறாயினும், பல்கலைக்கழக பங்களிப்பின் பகுதி நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக காட்டப்பட்டுள்ளதுடன் தனியான வங்கிக் கணக்கொன்றும் பேணப்படுகின்றது. | |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXVI இன் 2.1 ஆம் பிரிவு | நிதியாண்டின் இறுதித் திகதியில் பல்கலைக்கழகத்தின் அனைத்து நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சியங்கள் என்பன பொருள் அளவைச் சபையினால் பௌதீக ரீதியில் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டிய நோக்கத்திற்காக நியமிக்கப்படல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 745,237,324 கூட்டுத்தொகையான கிரயத்தினையுடைய பல்கலைக்கழகத்தின் ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், வாகனங்கள் மற்றும் பட்டதாரிகளுக்கான அங்கிகள் போன்றவை பொருள் அளவுச்சபையினால் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஐயவினாவில் குறித்துரைக்கப்பட்ட வகைகளுக்கான கணக்கெடுப்பை நடாத்துவதற்கு பொருள் அளவைச் சபை நியமிக்கப்படும். | ஏற்பாடுகளின் பிரகாரம், பொருள் அளவைச் சபையினால் வகைகளினை மெய்மையாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | யூ.ஜி.சி இன் 2013 ஏப்ரல் 10 ஆந் | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் | குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | கணக்காய்விற்கு 2017 ஆம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | திகதிய 04/2013 ஆம் இலக்க தாபன சுற்றறிக்கை கடிதத்தினால் திருத்தப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக் கோவையின் XXVI அத்தியாயத்தின் 3.3 ஆம் பிரிவு | அளவைச் சபை நடாத்தப்பட்டு அவற்றின் அறிக்கை 2018 மார்ச் 17 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இருப்பினும், 2017 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான வாசிகசாலை புத்தகங்கள் தொடர்பான அறிக்கை 2019 மே 31 வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | பொருள் அளவைச் சபை (2017) 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டதுடன் அறிக்கை தொடர்புடைய திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை வாசிகசாலை புத்தகங்களின் இருப்புக்களின் மெய்மையாய்வினை நடாத்துவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வாசிகசாலை மற்றும் தகவல் விஞ்ஞானங்கள் தொடர்பான நிலையியற் குழுவின் (SCOLIS) பரிந்துரையின் பிரகாரம் பொருள் அளவைச் சபை (2018), 2019 ஆம் அண்டில் நடாத்தப் பட்டிருக்கவில்லை. | ஆண்டின் இறுதியில் உள்ளவாறு வாசிகசாலை புத்தகங்கள் தொடர்பான அறிக்கைகளினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவையின் XXVI அத்தியாயத்தின் 3 மற்றும் 4 ஆம் பிரிவுகள் | 2017 ஆம் ஆண்டிற்கான பீஓஎஸ் அறிக்கை தொடர்பான நடவடிக்கை மற்றும் அது தொடர்பான பயன்படுத்தப்படாதவைகளின் அகற்றல் 2019 ஏப்ரல் 12 வரையிலும்கூட பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தப்படாத பொருட்கள் மற்றும் பயன்படாத மூலப் பொருட்களினை அகற்றுவதற்கு பயன்படுத்தப்படாத பொருட்களின் பொருள் அளவைச் சபையொன்று ஏற்கனவே நியமிக்கப் பட்டிருக்கின்றது. | மேலும், தாமதமின்றி தாபன விதிக்கோவையின் பிரகாரம் பீஓஎஸ் அறிக்கை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரச நிதிப் பிரமாணங்கள் - | ரூபா 7,999,618 கூட்டுத் தொகையான நாற்பத்தொன்பது மீளளிப்புச் செய்யப்படக்கூடிய வைப்புக்கள் 2 தொடக்கம் | 02 வருடங்களினை விடவும் அதிகமாக தொடர்ந்தும் காணப்படு கின்றவற்றை பல்கலைக்கழக | தாமதமின்றி நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | எவ்ஆர் 571 | 5 வருடங்கள் வரையான வீச்சினையுடைய காலப்பகுதிக்குள் காணப்பட்டன. இருப்பினும், இது தொடர்பில் தேவையான நடவடிக்கை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானத்தின் கீழ் கொண்டுவருதவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (ஊ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்களிற்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | அது ஒரு நீண்டசெயன்முறை மற்றும் கால எடுக்ககூடியதாகக் காணப்படுகின்றது. இந்த கணனிகள் மற்றும் உதிரிப் பாகங்களுக்கான நிலையான சொத்து பதிவேட்டைப் பூர்த்தி செய்வதற்கு எங்களுக்கு கணிசமான காலப்பகுதியொன்று தேவைப்படுகின்றது. 2019 இன் இறுதியளவில் பதிவேட்டை பூர்த்தி செய்வதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (எ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2017 யூலை 10 ஆந் திகதிய 10/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை கடிதம் | அனைத்து பதவியணியினரும் அவர்களின் வருகைகள் மற்றும் வெளியேற்றங்களை கைவிரல் அடையாள இயந்திரத்தில் பதிவு செய்தல் வேண்டும். இருப்பினும், கல்விசார் பதவியணியினர் தங்களது வருகைகள் மற்றும் வெளியேற்றங்கள் கைவிரல் அடையாள இயந்திரத்தில் பதிவு செய்வதற்கு மறுத்திருந்தமையால் அது தொடர்பில் திருப்திகரமான கட்டுப்பாட்டு முறையொன்று காணப்படவில்லை. | நடைமுறை யொன்றாக, இலங்கையில் அரச பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் பதவியணியினரின் வருகைகள் மற்றும் வெளியேற்றங்கள் பெணப்படுவதில்லை. மேலும், கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் தொடர்ச்சியாக இந்த விடயம் எழுகின்றபோதிலும், கல்விசார் பதவியணியினர்க்கு இந்த முறைமையை அமுல்ப்படுத்துவதில் பல்கலைக்கழக முறைமை சவால்களினை முகங்கொடுக்கின்றது. | தாபன விதிக் கோவை மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வருகைகள் மற்றும் வெளியேற்றங் களினைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஏ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2016 செப்தம்பர் 22 ஆந் திகதிய 07/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை கடிதம் | பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்கள் பொது விடுமுறை நாட்கள் மற்றும் வார இறுதி நாட்களில் விடுமுறைக் கொடுப்பனவினைப் பெறுவதற்கு ஒருநாளைக்கு எட்டு (08) மணித்தியாலங்களிற்கு குறையாமல் வேலை செய்ய வேண்டும். இருப்பினும், நாள் ஒன்றிற்கு (08) மணித்தியாலங்கள் பூர்த்தி செய்திராத அந்த உத்தியோகத்தர்களுக்கு அரைநாள் விடுமுறை கொடுப்பனவாக ரூபா 98,794 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | இந்த செலுத்துகை சுற்றறிக்கையின் மேலோட்டமான பார்வை காரணமாக மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், திருத்தம் செய்யப் பட்டிருக்கின்றதுடன் புதிய சுற்றறிக்கை 2018 செப்தம்பரிலிருந்து அமுல்படுத்தப் படுகின்றது. சுற்றறிக்கைக்கு முரணாக செலுத்தப்பட்ட தொகைகளினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைக்கு முரணாகச் செலுத்தப்பட்ட தொகைகளினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஐ) | 2018 மே 26 ஆந் திகதிய 212 ஆவது பேரவைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டல்களின் பிரகாரம் விடைத் தாள்களினை மதிப்பீடு செய்தல் தொடர்ரான 4.2 ஆம் பந்தி | முதலாம் முறை விடைத்தாள் திருத்துதல் சிவப்பு மையினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படல் வேண்டும். இது தொடர்பில், 11 விடைத்தாள் மாதிரிகளில், 07 விடைத்தாள்கள் பென்சிலைப் பயன்படுத்தி திருத்தப்பட்டிருந்தன. | குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. விடைத்தாள் பொதிகளுக்கான பரீட்சிப்பு பட்டியலொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றதுடன் பொதிகள் யாரால் பரீட்சைகள் கிளைக்கு சமர்ப்பிக்கப்பட்டது என்பது தொடர்புடைய துறைத் தலைவரினால் சான்றுறுதிப் படுத்தப்பட வேண்டும். இந்த அறிவுறுத்தல்கள் ஒவ்வொரு பீடங்களுடனும், அவர்களின் கண்டிப்பான இணக்கப்பாட்டிற்காக இது தொடர்பாடல் செய்யப்படும். | வழிகாட்டலினைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஓ) | 2018 மே 26 ஆந் திகதிய 212 ஆவது பேரவைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டல்களின் பிரகாரம் விடைத் தாள்களினை மதிப்பிடு செய்தல் தொடர்பான 4.3 ஆம் பந்தி | இரண்டாம் முறை விடைத்தாள் திருத்துதல் பச்சை மையினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படல் வேண்டும். இது தொடர்பில் 11 விடைத்தாள் மாதிரிகளில் 5 விடைத்தாள்கள் பென்சில், சிவப்புமை மற்றும் நீல மையினைப் பயன்படுத்தி திருத்தப்பட்டும் 3 விடைத்தாள்கள் இரண்டாம் முறை விடைத்தாள் திருத்தம் செய்யப்படாமலும் காணப்பட்டன. மேலும், வினாக்களின் பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்ட மதிப்பெண்கள் மற்றும் ஒவ்வொரு வினாக்களுக்கும் ஒதுக்கப்பட்ட மொத்த மதிப்பெண்கள் விடைத்தாள்களில் குறிப்பிடப்பட வேண்டும் அல்லது வழிகாட்டலின் பிரகாரம் சமமான மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டால் திக் குறி இடப்படல் வேண்டும். இருப்பினும், 11 மாதிரிகளில் 7 மாதிரிகளுக்கு இந்த நடைமுறை பின்பற்றப்பட்டிருக்க வில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. விடைத்தாள் பொதிகளுக்கான பரீட்சிப்பு பட்டியலொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றதுடன் பொதிகள் யாரால் பரீட்சைகள் கிளைக்கு சமர்ப்பிக்கப்பட்டது என்பது தொடர்புடைய துறைத் தலைவரினால் சான்றுறுதிப் படுத்தப்பட வேண்டும். இந்த அறிவுறுத்தல்கள் ஒவ்வொரு பீடங்களுடனும், அவர்களின் கண்டிப்பான இணக்கப்பாட்டிற்காக இது தொடர்பாடல் செய்யப்படும். | வழிகாட்டலினைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஓ) | 2018 மே 26 ஆந் திகதிய 212 ஆவது பேரவைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டல்களின் பிரகாரம் வருகையினைப் பேணுதலுடன் தொடர்புடைய பிரமாணங்களின் 1.8 ஆம் பந்தி | விரிவுரையாளர் விரிவுரை அமர்வுகள் முடிந்தும் அத்துறை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விரிவுரை / செயன்முறைப் பயிற்சி பதிவேட்டில் கையொப்பமிடல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டின் போது இந்த நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | குறித்துக்கொள்ளப் பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இந்த விடயத்தினை சரிப்படுத்தவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். பிரமாணங்களில் வழங்கப்பட்டவாறு இந்த நடைமுறையினைப் பின்பற்றுவதற்கு கண்டிப்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். | வழிகாட்டலினைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 57,517,296 பற்றாக்குறையொன்றையுடைய தொகையாகக் காணப்பட்டதுடன் தொடர்புடைய முன்னைய ஆண்டில் பற்றாக்குறை ரூபா 442,000,801 தொகையாகக் காணப்பட்டது. ஆகையினால், நிதி விளைவில் ரூபா 384,483,504 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிலிருந்து ரூபா 483,444,748 தொகையான மூலதன மானியம் நட்டக்கழிவிடப்பட்டமை முன்னேற்றத்திற்கான காரணங்களாகக் காணப்படுகின்றன.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் மானியம் மற்றும் மஹபொல மற்றும் கல்லி உதவி மானியம் போன்ற பல்கலைக்கழகத்தின் வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 16 சதவீதம் மற்றும் 13 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான ஏனைய வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 42 சதவீத்தால் குறைவடைந்திருந்தது.

மீளாய்வாண்டிற்கான ஆளணி வேதனங்கள், பெறுமானத்தேய்வு மற்றும் நிதி உதவி போன்ற பல்கலைக்கழகத்தின் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 20, 27 மற்றும் 13 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் மீளாண்டிற்கான பராமரிப்பு செலவினங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 32 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| விரிவுரையாளர் ஒருவரால் உடன்படிக்கை மீறப்பட்டதற்காக பிணைமுறி பெறுமதியை அறவீடுசெய்வதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு ஆறு ஆண்டுகளிற்கு மேலாக தாமதித்திருந்த பொறுப்பான உத்தியோகத்தர்களின் கவலையீனம் காரணமாக ரூபா 1.73 மில்லியன் நட்டம் பகல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்டிருந்த போதிலும் 2019 மே 13 வரையிலும் அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019.02.16 இல் நடைபெற்ற 224 ஆவது கூட்டத்தில் எடுக்கப்பட்ட பல்கலைக்கழக சபையின் திர்மானத்தின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பணிப்புரையின் பிரகாரம் விளக்கமளிப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு இவ் விடயத்தை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாங்கள் பணிப்புரையை பெற்றதும் அதற்கிணங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்படும். | பொறுப்பான உத்தியோகத்தர்களிட மிருந்து நட்டங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்தின் வெளிவாரி மாணவர்களிற்காக 2018 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறு 5 மாதங்கள் தொடக்கம் 9 மாதங்கள் வரையான தாமதமொன்றின் பின்னர் வெளியிடப்பட்டிருந்தது. | குழு புள்ளியிடும் முறைமையொன்றை நாங்கள் ஏற்கனவே அமுல்படுத்தியுள்ளதுடன் மூன்று மாத காலப்பகுதியினுள் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு தீர்மானித்துள்ளோம். | 3 மாதங்களினுள் வெளிவாரி பட்டங்களின் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வெளிவாரிப் பட்டங்களின் மாணவர் வழிகாட்டல் புத்தகத்தின் பிரகாரம் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை பூர்த்திசெய்வதற்கான ஆகக்குறைந்த காலப்பகுதி 3 கல்வியாண்டுகளாக காணப்பட்ட போதிலும் 7 பிரிவுகளுக்காக பதிவுசெய்யப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் 04 ஆண்டுகள் தொடக்கம் 06 ஆண்டுகள் வரையான ஆகக்குறைந்த காலப்பகுதியை பூர்த்திசெய்வதற்காக எடுத்திருந்தன. | கலைகள் மற்றும் கலாச்சாரம் மற்றும் முகாமைத்துவ வணிக பீடங்களிற்கு இத் தீர்மானத்துடன் இணங்குவதற்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது மூன்று மாத காலப்பகுதியினுள் அவர்களால் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு முடியாதிருந்தால் எதிர்காலத்தில் புள்ளியிடுவதற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது. இதனை அமுல்படுத்துதல் பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் உரிய நேரத்தில் பூர்த்திசெய்யப்படுவதை உறுதிப்படுத்தும். இது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்தை பின்பற்றுவதற்கு பணியாளர்/சீஈடிபிஎல் மற்றும் ஏஆர்/சீஈடிபிஎல் இற்கு ஏற்கனவே கடுமையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | மாணவர் வழிகாட்டல் புத்தகத்தின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தைப் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 06 பீடங்களிற்காக 2017/18 கல்வியாண்டிற்காக பல்கலைக்கழகத்திற்கு சேர்க்கப்பட்ட மாணவர்களின் அங்கீகரித்த எண்ணிக்கை 1791 ஆக காணப்பட்ட போதிலும் அக் | இசற் - வெட்டுப்புள்ளியை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களின் பட்டியலை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுப்புவதாலும் மாணவர்களிடமிருந்து | மாணவர்களை சேர்த்துக்கொள்வதை உத்தம மட்டத்தில் பேணுவதன் மூலம் பல்கலைக்கழகத்தின் முழுமையான இயலளவை |

| | | | |
|---|---|---|---|
| | கல்வியாண்டிற்காக 1146 மாணவர்கள் அல்லது 64 சதவீதம் மாத்திரமே சேர்த்துக்கொள்ளப்பட்டிருந் தனர். பிரயோக விஞ்ஞான பீடத்திற்கு 2017/18, 2016/17, 2015/16 கல்வியாண்டுகளிற்காக சேர்ப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை முறையே 300, 300 மற்றும் 350 ஆக காணப்பட்ட போதிலும் 209, 259 மற்றும் 205 மாணவர்களே சேர்த்துக்கொள்ளப்பட்டிருந் தனர். இது 58 ஆக குறைந்த சதவீதமொன்றை பிரதிநிதித்துவப் படுத்தியிருந்தது. | விண்ணப்பங்கள் பெறப்படுவதாலும் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை மீது பல்கலைக்கழகம் கட்டுப்பாடு எதனையும் கொண்டிருக்கவில்லை. மாணவர்களின் பட்டியல்கள் அனுப்பப்படுகின்ற போதிலும் மாணவர்களின் தெரிவுகளை அடிப்படையாகக் கொண்டு அப் பல்கலைக்கழகங்களில் வெற்றிடங்கள் நிரப்பப்படுவதன் காரணமாக அவர்களில் சிலர் ஏனைய பல்கலைக்கழகங்களிற்கு தெரிவாகின்றனர். சில மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றிருந்த போதிலும் அவர்களிற்கு கிடைக்கக்கூடிய ஏனைய விருப்பத்தெரிவுகளிற்கு அவர்கள் செல்கின்றனர். ஆகையால் எங்களுடன் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பாக எந்தவொரு கட்டுப்பாட்டையும் நாங்கள் கொண்டிருப்பதில்லை. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அளவுகோலின் (Benchmark) பிரகாரம், கலைகள் மற்றும் கலாச்சாரம், முகாமைத்துவம் மற்றும் வணிகம் மற்றும் இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடங்கள் மற்றும் பிரயோக விஞ்ஞானம், பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பீடங்களில் இளமானி பட்டதாரி மாணவர்கள் : நிரந்தர கல்விகற்கும் பதவியணியினர் விகிதம் முறையே 18:1 மற்றும் 10:1 ஆக பேணப்பட வேண்டும் எனினும் மேற்படி அளவுகோலிற்கு முரணாக 19:1 தொடக்கம் 49:1 | கூட்டத்தின் மூலம் 2019 யூன் காலக்கெடு நியமித்தை அடிப்படையாகக் கொண்டு அதிக பதவியணியினரை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அதிகமான பதவியணி வெற்றிடங்கள் அங்கீகரிக்கப்பட்டதும் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மாணவர்கள் மற்றும் கல்வி கற்பிக்கும் பதவியணியினர் விகிதத்தின் பிரகாரம் அங்கீகாரத்தை பெறுவவதற்கும் அப் பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரையான வீச்சில் மேற்படி விகிதத்தை பல்கலைக்கழகம் பேணியிருந்தது. இதன் விளைவாக கல்வி கற்பித்தல் மற்றும் கல்வி கற்றல் மேவுகை திருப்திகரமாக பூர்த்திசெய்யப்பட முடியாதிருந்தது. | | |
| (உ) | பொறியியல் பயிற்சியாளர்களிற்கான உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியான தேவைப்பாட்டிற்காக பொறியியல் இளமானி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒப்பந்தங்களை இனங்காணுதல் மற்றும் ஒத்தியல்பு மதிப்பீடுகளிற்கான இணக்கப்பாடு என்பவற்றை இலங்கை பொறியியல் நிறுவனம் (ஐஈஎஸ்எல்) மதிப்பிடு செய்கின்றது. இது தொடர்பாக பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் 2013 பெப்ரவரி 05 இல் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல் மற்றும் இயந்திரவியல் பொறியியல் பட்டங்களிற்காக ஐஈஎஸ்எல் இடமிருந்து அங்கீகாரத்தினை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் பெற்றிருக்கவில்லை. ஆகையால் 2011/12 மற்றும் 2012/13 கல்வியாண்டுகளிற்குரிய பட்டதாரிகளில் சித்தியெய்திய 87 பேர் ஐஈஎஸ்எல் இன் அங்கீகாரமின்றி பொறியியல் தொழிலை மேற்கொள்ள முடியாதுள்ளனர். | மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல் மற்றும் இயந்திரவியல் பொறியியல் பட்டங்களை அங்கீகரிப்பது தொடர்பான அவர்களது தீர்மானத்தை மீளக் கருத்தில் கொள்வதற்கு 2018 ஒக்தோபரில் ஐஈஎஸ்எல் இற்கு அதனுடன் தொடர்புபட்டவர்கள் விளக்கமளித்து பீடத்தால் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தது. மேன்முறையீடுகளிற்கான பதிலை ஐஈஎஸ்எல் இடம் பீடம் எதிர்பார்த்து இருக்கின்றது. | மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல் மற்றும் இயந்திரவியல் பொறியியல் போன்ற பட்டங்களிற்காக ஐ.ஈஎஸ்எல் இடமிருந்து அங்கீகாரத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் போது 5 பீடங்களிற்காக நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டங்கள் வழங்கப்பட்ட பட்டதாரிகளிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் பல்கலைக்கழக பட்டதாரிகளின் தொழில்வாய்ப்பு சதவீதம் 39 சதவீதம் தொடக்கம் 83 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | சில பீடங்களில் பெண் மாணவர் எண்ணிக்கை மிகவும் உயர்வாக உள்ளதுடன் அவர்கள் பட்டத்தை பெற்றிருந்த போதிலும் அவர்களில் அனைவரும் வேலையொன்றை பெற்றுக்கொள்வதில்லை என்பதை குறித்துக்கொள்வது முக்கியமானதாகும். பட்டதாரியின் தொழில்வாய்ப்பை கணிப்பிடும் போது இதனையும் கருத்தில் கொள்வது அவசியமானதாகும். | திறன் அடிப்படையிலான கல்வியூடாக கற்கைநெறிகளின் தரம் மற்றும் பொருத்தத் தன்மையை வழங்குவதன் மூலம் பட்டதாரிகளின் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | உலக ரீதியான மற்றும் உள்ளூர் பல்கலைக்கழக தரவரிசைப்படுத்தல்களின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு 4000 தரவரிசைக்கு குறைவான இடத்தை அடைவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் பல்கலைக்கழகத்தால் 2018 ஆம் ஆண்டில் முறையே 9004 ஆவது மற்றும் 17 ஆவது இடத்தை மாத்திரமே பெற முடிந்திருந்தது. மேலும் முன்னைய ஆண்டில் பல்கலைக்கழகம் முறையே 8510 ஆவது மற்றும் 15 ஆவது இடத்தில் தரவரிசைப்படுத்தப்பட்டிருந்ததால் பல்கலைக்கழகத்தின் தரவரிசைப்படுத்தல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வீழ்ச்சியடைந்திருந்தது. | ஒவ்வொரு பீடத்திற்காக கற்றல் முகாமைத்துவ முறைமையை அறிமுகப்படுத்துதல், பல்கலைக்கழகத்தின் e-repository இன் தகவல் மற்றும் பல்கலைக்கழக இணையத்தளத்தை தொடர்ச்சியாக கண்காணிக்கும் Inter alia நோக்கங்களிற்காக உருவாக்கப்பட்ட ICT ஆலோசனை சபையின் நிர்மாணம் மற்றும் webometric தரவரிசைப்படுத்தலில் அதன் தாக்கம் என்பவற்றினூடாக Webometric தரப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டு விருப்பமான இலக்கை அடைந்துகொள்வதற்கு சில சீர்திருத்தத்தை பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது. webometrics மற்றும் QS போன்ற தரவரிசைப்படுத்தல் numbered league அட்டவணையொன்றை வழங்குகின்றதுடன் இத் தரவரிசைப்படுத்தல் அதிலுள்ள பல குறைபாடுகள் காரணமாக ஒப்பிடு செய்யபப்பட முடியாதுள்ளன. | Webometric தரவரிசைப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டு விருப்பமான இலக்கை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அதற்கிணங்க அரச பல்கலைக்கழகங்களின் தரவரிசைப்படுத்தல் ஆகவுள்ள உள்ளூர் தரவரிசைப்படுத்தல் முறைமையொன்றை அறிமுகப்படுத்தும் செயன்முறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உள்ளது. | |

## 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

---

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 யூலை 10 இல் தொழில்நுட்ப பீடத்தால் ரூபா 1,043,075 தொகையான Hp Sever கையேற்கப்பட்டிருந்த போதிலும் அது 2019 ஏப்ரல் 25 வரையிலும் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப பீடத்தால் 2017 யூலை 10 இலிருந்து Hp Sever பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த Sever ஊடாக பல சேவைகளிற்கு உள்நுழைவதற்காக மாணவர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. 2019 சனவரியின் போது இடம்பெற்ற அலுவலக பாகப்பிரிவினை வேலைகள் காரணமாகவும் தொடர்ந்து 2019 பெப்ரவரி மாதத்தின் போது கற்கை விடுமுறை மற்றும் 2019 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களின் போது நடைபெற்ற அரையாண்டுப் பரீட்சைகள் காரணமாகவும் இக் குறித்த Sever தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது. வேலை மற்றும் பரீட்சைக் காலப்பகுதி முடிவடைந்த உடனே இந்த Sever மீண்டும் பயன்பாட்டில் அல்லது செயற்பாட்டில் வைக்கப்படுகின்றது. | மேலதிக தாமதமின்றி Sever இனை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) ரூபா 523,998 விலைவீதத்தில் 60 iMac கணனிகளுக்காக ரூபா 31.3 மில்லியன் தொகை 2018 | 60 எண்ணிக்கையான iMac கணனிகள் அனைத்தையும் பொருத்துவதற்காக | மேலதிக தாமதமின்றி கணனிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டின் போது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப திணைக்களத்திற்காக நடமாடும் பிரயோக அபிவிருத்தி ஆய்வுகூடத்தை ஸ்தாபிப்பதற்காக ஏஎச்ஈஏடி மற்றும் ஜீஓஎஸ்எல் நிதி ஊடாக செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2018 திசெம்பர் 27 இல் கணனிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2019 மே 13 வரையிலும் அத்தகைய கணனிகளின் பாவனைக்கான உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததன் காரணமாக உரிய நோக்கங்களிற்கு அவை பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | ஆய்வுகூடத்தின் பிரிவிடல் (உட்கட்டமைப்பு) வேலை தற்போது பூர்த்தியடைந்துள்ளது. இது ஆரம்ப இடமாக காணப்படுவதால் அவ் ஆய்வுகூடத்திற்கு இக் கணனிகளை தயார்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இக் கணனி விடயம் தொடர்பாக செயன்முறை அமர்வுகள் ஆரம்பிப்பதற்காக காத்திருக்கின்ற எதிர்வரும் புதிய அரையாண்டுகளிற்காக பட்டியலிடப்பட்டுள்ளது. 2019.05.06 இல் நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலின் பின்னர் நாட்டில் நிலவிய பாதுகாப்பு சிக்கல்கள் காரணமாக அரையாண்டை தொடங்குவதற்கு குறித்த திகதியொன்றை தீர்மானிக்க முடியாதிருந்தது. எனினும் 2019.06.17 தொடக்கம் அரையாண்டு ஆரம்பிக்கப்படும். | எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 84,156,395 கிரயத்தில் பிரயோக விஞ்ஞான பீடத்திற்கான ஆய்வுகூடத் தொகுதியொன்றை நிர்மாணிக்கும் வேலைகள் 2011 ஒக்தோபர் 31 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2014 பெப்ரவரி 15 இல் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. மேலும் 2016 ஆம் ஆண்டில் கூரை மின்விசிறிகள் (Ceiling Fans) மற்றும் மின்குமிழ்கள் போன்ற மின்னியல் பொருத்துக்களிற்காக ரூபா 1,856,467 தொகை செலவிடப்பட்டிருந்த | வடிகாலமைப்பு, காஸ் மற்றும் நீர் இணைப்பு முறைமைகளிற்காக கேள்விகள் கோரப்பட்டிருந்ததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவின் மதிப்பீட்டின் கிழ் அவை காணப்பட்டன. இம் மாத இறுதியில் மதிப்பீட்டு செயன்முறை பூர்த்திசெய்யப்பட்டு 2019 யூன் மாதத்தின் 2 ஆவது கிழமையளவில் கேள்வி வழங்கப்பட முடியும். 2 மாத காலப்பகுதியினுள் தெரிவுசெய்யப்பட்ட | மேலதிக தாமதமின்றி ஆய்வுகூடத் தொகுதியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| போதிலும் 2019 மே 13 வரை உரிய நோக்கத்திற்காக அவ் ஆய்வுகூட தொகுதி பயன்படுத்தப் பட்டிருக்காததுடன் தேவையான ஆய்வுகூட உபகரணங்களை கொள்வனவு செய்வதில் காணப்பட்ட தாமதங்கள் காரணமாக 2 ஆய்டுகளிற்கு மேலாக விளைவற்றிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்ததாரர் வேலையை பூர்த்திசெய்ய வேண்டியிருப்பதால் அனைத்து ஆய்வுகூடங்களிலும் செப்தெம்பர் 1 இலிருந்து ஆரம்பிக்கும் செயன்முறை வகுப்புகளிற்காக பயன்படுத்தப்பட முடியும். |

### 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2010 ஆம் ஆண்டில் முகாமைத்துவ வணிக பீடத்திற்கு கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 112 மில்லியன் ஒப்பந்த பெறுமதியில் ஒப்பந்தமொன்றை பல்கலைக்கழகம் வழங்கியிருந்ததுடன் 2014 பெப்ரவரி 22 இல் அல்லது அதற்கு முன்னர் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்தது. நிர்மான வேலைகள் 2014 ஏப்ரல் 20 இல் பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 2,977,412 தொகையான தாமதக் கட்டணங்கள் உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்ததாரரிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காலநீடிப்பிற்காக சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது | ஒப்பந்தகாரர் அல்லது பொறுப்பான உத்தியோகத்தர்களிட மிருந்து தாமதக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) ஒப்பந்த உடன்படிக்கையின் 13.7 ஆம் உட்பிரிவிற்கு முரணாக கட்டிடத் தொகுதி நிர்மாணத்திலுள்ள ஆரம்ப விடயங்களிற்காக மாற்றம் செய்ய முடியாத கூறிற்காக ஒப்பந்ததாரரிற்கு ரூபா 2,495,837 தொகையை பல்கலைக்கழகம் செலுத்தியிருந்தது. மேலும் மதியுரை கட்டணம் பெறுமதி சேர் வரியை தவிர்த்து மொத்த ஒப்பந்த விலையில் 5.25 சதவீத விலைவீதத்தில் செலுத்தப்பட வேண்டிய போதிலும் இரண்டு | மதியுரையாளரின் பரிந்துரை அடிப்படையில் இது செலுத்தப் பட்டிருந்தது. மதியுரையாள ரிற்கான கொடுப்பனவுகள் உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப் பட்டிருந்தன. | கொடுப்பனவுகளின் நியாயத்தன்மையை இனங்காண்பதற்கு அல்லது அதிகாரமளிக்கப்படாத கொடுப்பனவை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வெவ்வேறு விலைவீதங்களை பயன்படுத்தி பல்கலைக்கழகம் இதனை கணிப்பீடு செய்திருந்தது. இதன் விளைவாக ரூபா 659,138 தொகை மதியுரையாளரிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 03 செயற்பாடுகளிற்காக மீளாய்வாண்டிற்காக வருடாந்த பாதீட்டில் மேற்கொள்ளப்படட ரூபா 292,500 தொகையான நிதியேற்பாட்டில் 43 சதவீதம் தொடக்கம் 82 சதவீதம் வரையான வீச்சிலான நிதியேற்பாடுகள் உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | மார்ச், ஏப்ரல் மாதங்களின் போது கல்விசாரா பதவியணியினரின் பகிஷ்கரிப்புக்கள் மற்றும் 2018 செப்தெம்பர் மற்றும் ஒக்தோபர் மாதங்களின் போது மாணவர்களால் நிர்வாக கட்டிடத்தொகுதி கைப்பற்றப்பட்டிருந்தமை காரணமாக இச் சேமிப்புக்கள் விளைந்திருந்தன. ஆகையால் 2018 ஆம் ஆண்டின் போது பட்டியலிடப் பட்டவாறு சில பிரதான வேலைகளை எங்களால் அமுல்படுத்த முடியாதிருந்தன. எனினும் 2018 ஆம் ஆண்டிற்குரிய வேலைகள் ஏற்கனவே 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் செயன்முறைப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க நிதிகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. | உரிய நோக்கங்களிற்காக நிதியேற்பாடுகள் பயன்படுத்தப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| குறித்த செற்பாட்டின் செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்காக சரியான புள்ளிவிபரத் தரவுகள் காணப்படுதல் கட்டாயமானதாக உள்ள போதிலும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதை மதிப்பீடு செய்யும் நோக்கில் சரியான தரவு சேகரிப்பொன்றை பேணுவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்காமை அவதானிக்கப்பட்டது. எஸ்டிஜி இன் சார்பில் பயிற்றப்பட்ட பதவியணியினர் காணப்படாதமை போன்ற காரணங்கள் இதற்கு பங்களித்திருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | குறித்துக் கொள்ளப்பட்டுள்ள துடன் இதனை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். நாங்கள் ஏற்கனவே சில முயற்சிகளை எடுத்துள்ளோம். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களிற்காக இலக்குகள் மற்றும் கேபிஐ இனை உருவாக்குவதற்கும் இலக்கினை அடைந்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |